பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**26 01 2026 MONDAY 7.15 PM**

ஆகாஷவாணி

**<u>தலைப்புச் செய்திகள்</u>**

1. நாட்டு மக்கள் நலனில் அக்கறை கொண்டே மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. குடியரசு தின கொண்டாட்டங்களில் ஐரோப்பிய ஆணையம் மற்றும் கவுன்சிலின் தலைவர்கள் பங்கேற்றது, ஐரோப்பிய யூனியன் உடனான நல்லுறவின் மைல்கல் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. அனைத்து வகை பயறுகளையும் 100 சதவீதம் கொள்முதல் செய்ய அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

4. கிரீஸ் நாட்டின் பிஸ்கெட் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் நான்கு பெண் தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

5. தெற்காசிய ஆடவர் **Futsal** சாம்பியன் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

--இனி விரிவான செய்திகள் —

<<<<<>>>>>

நாட்டு மக்கள் நலனில் அக்கறை கொண்டே மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

''பிரதமர் தலைமையிலான நாட்டின் முன்னேற்றப் பயணம்'' என்ற தலைப்பிலான பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங்-கின் கட்டுரையை பிரதமர் தமது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.

குடியரசு என்பது சமூக நீதியை முன்னெடுத்துச் செல்வதாகவும், மக்களை உள்ளடக்கிய பொருளாதாரத்தை சாத்தியமாக்குவதாகவும் இருக்க வேண்டும் என்று திரு நரேந்திர மோடி அதில் தெரிவித்துள்ளார்.

இந்த முயற்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து மக்களுக்கான குடியரசை உறுதி செய்வதுடன், அரசியலமைப்புச் சட்டத்தின் தொலைநோக்கு பார்வையை நிலைநிறுத்துவதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

துவரை உள்ளிட்ட அனைத்து பயறு வகைகளையும் 100 சதவீதம் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்வதற்கு அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லி குடியரசு தின விழாவில் பங்கேற்ற விவசாயிகளுடன் கலந்துரையாடிய அவர், இதன்மூலம், விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பது உறுதி செய்யப்படும் என்று தெரிவித்தார்.

இந்திய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விவசாயம் தொடர்ந்து நீடிப்பதாகவும், விவசாய சாகுபடி மற்றும் தொடர்புடைய பணிகளில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ 70 சதவீத மக்கள் ஈடுபட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

சீனாவை பின்னுக்கு தள்ளி, உலகிலேயே அதிக அரிசி உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா உருவெடுத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாசுமதி உள்ளிட்ட அரிசி ரகங்கள் விற்பனை மூலம் விவசாயிகளுக்கு அதிக விலை கிடைத்து அவர்கள் பலனடைந்து வருவதாக திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<>>>>>

ஆஸ்திரேலியா உடனான இருதரப்பு நல்லுறவை வலுப்படுத்தவும், நீடித்த வளர்ச்சியை உருவாக்கவும் இந்தியா விரும்புவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா தேசிய தினத்தையொட்டி, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், அந்நாட்டு வெளியுறவுத்துறை

அமைச்சருக்கும், மக்களுக்கும் வாழ்த்து தெரிவித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவுகள் நீண்டகால பாரம்பரியத்தை கொண்டுள்ளதாகவும் டாக்டர் ஜெய்சங்கர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

நாட்டின் 77-ஆவது குடியரசு தினம் இன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

தலைநகர் புதுதில்லியில் உள்ள கடமைப்பாதையில் நடைபெற்ற மூவர்ண கொடியேற்றும் விழாவிற்காக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வுடன் இந்த ஆண்டு சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்ற ஐரோப்பிய கவுன்சில் தலைவர் திரு அன்டோனியோ கோஸ்டா, ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் திருமதி உர்சுலாவோன் டெர் லேயன் ஆகியோரும் பாரம்பரிய முறையில் குதிரைகள் பூட்டிய வாகனத்தில் அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து தேசியக்கொடி பறக்கவிட்டபோது, விமானப்படை ஹெலிகாப்டர்கள் மூலம் மலர்கள் தூவப்பட்டன.

பின்னர், முப்படைகளின் அணிவகுப்பு நடைபெற்றது.

இதனை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பார்வையிட்டு ஏற்றுக்கொண்டார்.

அணிவகுப்பில் பிரம்மோஸ் ஏவுகணை மற்றும் உள்நாட்டிலேயே தயாரான அதிநவீன ஆயுதங்களின் அணிவகுப்பு, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்த முப்படைகளின் சிறப்பு அலங்கார ஊர்தியும் இடம்பெற்றிருந்தது காண்போரை கவரும் வகையில் அமைந்தது.

தொடர்ந்து, வந்தே மாதரம் பாடல் இயற்றப்பட்டு 150-ஆவது ஆண்டை குறிக்கும் வகையில், அனைத்து மாநிலங்களையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான நடனக் கலைஞர்கள் பங்கேற்ற நடனமும் இடம்பெற்றது.

***(Sound Byte — நடனம் — 25 Sec. )***

இந்த நிகழ்ச்சியில், விமானப்படையின் குரூப் கமாண்டர் சுபான்ஷு சுக்லாவுக்கு நாட்டின் உயரிய அசோக் சக்ரா விருதை குடியரசுத் தலைவர் வழங்கி கௌரவித்தார்.

முன்னதாக, தில்லியில் உள்ள போர் நினைவு சின்னத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி, மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

குடியரசு தினம் தமிழகம் உட்பட அனைத்து மாநிலங்களின் தலைநகரங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

<<<<<>>>>>

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, குடியரசு தின விழாவில் பங்கேற்ற சிறப்பு விருந்தினர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுக்கு இன்று விருந்தளித்தார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற விருந்து நிகழ்ச்சியில், ஐரோப்பிய கவுன்சில் தலைவர் திரு அன்டோனியோ கோஸ்டா, ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் திருமதி ஊர்சுலா வான் டெர் லேயன், குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

<<<<<>>>>>

குடியரசு தின கொண்டாட்டங்களில் ஐரோப்பிய ஆணையம் மற்றும் கவுன்சிலின் தலைவர்கள் பங்கேற்றது, ஐரோப்பிய யூனியன் உடனான நல்லுறவின் மிகசிறந்த மைல்கல் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள பதிவில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோருடன் திரு அன்டோனியோ கோஸ்டா, திருமதி ஊர்சுலா வான் டெர் லேயன் பங்கேற்றது முக்கியத்துவம் வாய்ந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய யூனியன் ராணுவப் படைகளை உள்ளடக்கிய அதிகாரிகளும், அட்லாண்டா மற்றும் **Aspides** கடற்படையினர், குடியரசு தின அணிவகுப்பில் முதல் முறையாக கலந்துகொண்டதையும் வெளியுறவு அமைச்சகம் அதில் சுட்டிக்காட்டியுள்ளது.

<<<<<>>>>>

குடியரசு தின அணிவகுப்பில் இடம்பெற்ற மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் அலங்கார ஊர்தி பார்வையாளர்களை வெகுவாக கவரும் வகையில் அமைந்தது.

இந்திய பாரம்பரிய மருத்துவ முறைகளை நவீன தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைத்த விரிவான நடவடிக்கையை வெளிப்படுத்துவதாக அந்த ஊர்தி இடம்பெற்றது.

தேசிய ஆயுஷ் திட்டத்தின்கீழ், ’’ஆயுஷின் தந்திரம் — ஆரோக்கியத்தின் மந்திரம்’’ என்ற கருப்பொருளுடன் இடம்பெற்ற இந்த ஊர்தி, சுயசார்பு இந்தியா மற்றும் மக்களை உள்ளடக்கிய

வளர்ச்சி என்ற தொலைநோக்கு பார்வையை பறைசாற்றும் வகையில் அமைந்திருந்ததாக ஆயுஷ் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் முனைவர் கே. ராமசாமிக்கு பத்ம ஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த **2012**-ஆம் ஆண்டு முதல் **2018**-ஆம் ஆண்டு வரை இவர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பொறுப்பு வகித்தார்.

பத்ம ஸ்ரீ விருதுக்கு தாம் தேர்வு செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாகவும், வேளாண் ஆராய்ச்சியாளர்கள் அனைவருக்கும் கிடைத்த அங்கீகாரமாக இதை கருதுவதாகவும் முனைவர் கே. ராமசாமி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — கே. ராமசாமி — 1.07 Sec.)***

<<<<<>>>>>

கிரீஸ் நாட்டின் **Trikala** நகரில் பிஸ்கட் தயாரிப்பு நிறுவனத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் நான்கு பெண் தொழிலாளர்கள் உயிரிழந்தனர். ஏழு பேர் காயமடைந்தனர்.

இரவுநேர பணியில் இருந்தபோது அந்த ஆலையில் திடீரென தீப்பற்றியதாகவும், தீயணைப்புத் துறையினர் பலமணிநேர

போராட்டத்திற்கு பின்னர் தீயை அணைத்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தெற்காசிய ஆடவர் **Futsal** சாம்பியன் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

இன்று நடைபெற்ற கடைசி லீக் ஆட்டத்தில், இந்தியா **4-1** என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை வென்றது.

இதன்மூலம், புள்ளி பட்டியலில் **11** புள்ளிகளை பெற்று இரண்டாம் இடத்தை பிடித்ததன் அடிப்படையில் இந்தியாவிற்கு இப்பதக்கம் கிடைத்தது.

-----------------

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி இன்று பெங்களூர் அணியை எதிர்கொள்கிறது.

வதோதராவில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற பெங்களூரு அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

------------

ஆஸ்திரேலிய ஓபன் ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரேவதி ராஜேஷ்வரன் — ஆஸ்திரேலியாவின் **Renne Alame** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

மெல்போர்னில் இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, **6-4, 6-2** என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Azuna Ichioka** — **Sonobe Wakana** இணையை வென்றது.

**<<<<<END>>>>>**